بسم الله الرحمن الرحيم　　نحمده ونصلّي على رسوله الكريم　　وعلى عبده المسيح الموعود

وَلَقَدۡ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدۡرٍ وَّأَنۡتُمۡ أَذِلَّةٌ

தொகுதி
1
வருடாந்திர
சந்தா
ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

# பதர்

காதியான்

The Weekly
BADAR Qadian
TAMIL

இதழ்
13
ஆசிரியர்
முஸ்ஸம்மில்
அஹ்மது
துணை
ஆசிரியர்
ர:ஃபீக்
அஹ்மது

25 ஷஅபான் 1437 ஹிஜ்ரி கமரி 2 ஜூன் 2016

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல–னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**ரமலான் மாதம் உள்ளம் ஒளி பெறுவதற்கான சிறந்த மாதமாகும். அதிகமாக இதில் கஷ்ஃப் காட்சிகள் ஏற்படுகின்றன. தொழுகை ஆன்மாவை தூய்மைப்படுத்துகின்றது. நோன்பு உள்ளத்திற்கு ஒளியூட்டுகின்றது. ஆன்மா தூய்மையடைதல் என்பதன் பொருள் நஃப்ஸே அம்மாரா அதாவது தீமையின் பக்கம் தூண்டும் ஆன்மாவின் இச்சைகளிருந்து விலகி தொலைவில் சென்று விடுவதாகும். உள்ளத்திற்கு ஒளியூட்டப்படுதல் என்பதன் கருத்து கஷ்ஃப் காட்சிகளைக் காண்பதற்கான கதவு அவருக்காக திறக்கப்பட்டு அவர் இறைவனைக் காண்பதாகும்.**

# வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றுகளிலிருந்து...

## திருக்குர்ஆன்

شَهۡرُ رَمَضَانَ الَّذِیۡۤ اُنۡزِلَ فِیۡهِ الۡقُرۡاٰنُ هُدًی لِّلنَّاسِ وَبَیِّنٰتٍ مِّنَ الۡهُدٰی وَالۡفُرۡقَانِ ۚ فَمَنۡ شَهِدَ مِنۡکُمُ الشَّهۡرَ فَلۡیَصُمۡهُ ؕ وَمَنۡ کَانَ مَرِیۡضًا اَوۡ عَلٰی سَفَرٍ فَعِدَّةٌ مِّنۡ اَیَّامٍ اُخَرَ ؕ یُرِیۡدُ اللّٰهُ بِکُمُ الۡیُسۡرَ وَلَا یُرِیۡدُ بِکُمُ الۡعُسۡرَ ۫ وَلِتُکۡمِلُوا الۡعِدَّةَ وَلِتُکَبِّرُوا اللّٰهَ عَلٰی مَا هَدٰىکُمۡ وَلَعَلَّکُمۡ تَشۡکُرُوۡنَ ○ وَاِذَا سَاَلَکَ عِبَادِیۡ عَنِّیۡ فَاِنِّیۡ قَرِیۡبٌ ؕ اُجِیۡبُ دَعۡوَةَ الدَّاعِ اِذَا دَعَانِ ۙ فَلۡیَسۡتَجِیۡبُوۡا لِیۡ وَلۡیُؤۡمِنُوۡا بِیۡ لَعَلَّهُمۡ یَرۡشُدُوۡنَ ○

பொருள்: ரமலான் மாதம் எத்தகைய (மாதம்) என்றால் அதைப் பற்றி திருக்குர்ஆன் இறக்கப்பட்டுள்ளது (அந்தக் குர்ஆன்) எல்லா மக்களுக்கும் நேர்வழி காட்டக்கூடியதாகும். மேலும், அது தெளிவான ஆதாரங்களை தன்னகத்தே கொண்டிருக்கின்றது. (எத்தகைய ஆதாரங்களை என்றால்) அது நேர்வழியை உருவாக்குகின்றது. அத்துடன் (திருக்குர்ஆனில்) இறை அடையாளங்களும் உள்ளன. உங்களில் எவர் அம்மாதத்தை (அவர் நோயாளியாகவோ பயணியாகவோ இல்லாத நிலையில்) காண்பாரோ அவர் அதில் நோன்பு நோற்க வேண்டும். ஆனால், நோயாளியாகவோ பயணியாகவோ இருப்பவர் (விட்டுப் போன நோன்பை) மற்ற நாளில் கணக்கிட்டு (நோற்கவும்). அல்லாஹ் உங்களுக்கு எளிதை விரும்புகிறான். உங்களுக்குக் கடினத்தைத் (தர) விரும்புவதில்லை. (நீங்கள் கஷ்டத்திற்கு ஆளாகி விடக் கூடாது என்பதற்காகவே அவன் இந்தக் கட்டளையை வழங்கியுள்ளான்.) நீங்கள் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்வதற்காகவும், அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக நீங்கள் அவனைப் பெருமைப்படுத்துவதற்காகவும் நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்துவதற்காகவுமே (இந்தக் கட்டளையை அவன் பிறப்பித்துள்ளான்) (தூதரே) என் அடியார்கள் உம்மிடம் என்னைப் பற்றிக் கேட்டால் நான் அருகில் இருக்கின்றேன். பிராத்தனையை ஏற்றுக் கொள்கின்றேன். எனவே (துஆ செய்கின்ற) அவர்களும் என் கட்டளையை ஏற்றுக் கொண்டு என்னிடம் நம்பிக்கை கொள்ள வேண்டும். இதனால் அவர்கள் நேர்வழி பெறுவார்கள் (என்று பதில் அளிப்பீராக!) (2:186,187)

## நபிமொழி

’’مَنۡ اَفۡطَرَ یَوۡمًا مِنۡ شَهۡرِ رَمَضَانَ مِنۡ غَیۡرِ رُخۡصَةٍ وَلَا مَرَضٍ فَلَا یَقۡضِیۡهِ صِیَامُ الدَّهۡرِ کُلِّهٖ وَلَوۡ صَامَ الدَّهۡرَ‘‘

“ஒருவர் ரமலான் மாதத்தின் ஒரு நோன்பை (எவ்வித தகுந்த காரணமுமின்றி) விட்டு விட்டாலும் கூட அந்த நபர் அதற்குப் பிறகு அந்த ஒரு நோன்பிற்குப் பகரமாக முழு வாழ்நாளும் நோன்பு நோற்றாலும் கூட அவர் அதற்கான பரிகாரத்தைச் செய்து விட முடியாது” (முஸ்னது தாரமி பாபு மன் அ:ஃப்தர யவ்மன் மின் ரமலான முதஅம்மிதன்)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூய கூற்றுகளிலிருந்து:

’’شَهۡرُ رَمَضَانَ الَّذِیۡۤ اُنۡزِلَ فِیۡهِ الۡقُرۡاٰنُ‘‘ “ரமலான் மாதம் எத்தகைய (மாதம்) என்றால் அதைப் பற்றி திருக்குர்ஆன் இறக்கப்பட்டுள்ளது (2:186) என்பதிலிருந்து ரமலான் மாதத்தின் மகத்துவம் தெரிய வருகின்றது. உள்ளம் ஒளி பெறுவதற்கு இந்த மாதம் சிறந்த மாதமாகும் என்று சூ:ஃபிகள் எழுதியுள்ளனர். இம்மாதத்தில் அதிகமாக கஷ்:ஃப் காட்சிகள் ஏற்படுகின்றன. தொழுகை ஆன்மாவை தூய்மைப்படுத்துகின்றது. நோன்பு உள்ளத்திற்கு ஒளியூட்டுகின்றது. ஆன்மா தூய்மையடைதல் என்பதன் பொருள் ந:ஃப்ஸே அம்மாரா அதாவது தீமையின் பக்கம் தூண்டும் ஆன்மாவின் இச்சைகளிலிருந்து விலகி தொலைவில் சென்று விடுவதாகும். உள்ளத்திற்கு ஒளியூட்டப்படுதல் என்பதன் கருத்து கஷ்:ஃப் காட்சிகளைக் காண்பதற்கான கதவு அவருக்காக திறக்கப்பட்டு அவர் இறைவனை காண்பதாகும். எனவே, اُنۡزِلَ فِیۡهِ الۡقُرۡاٰنُ என்பதிலும் இதுவே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. நோன்பிற்கான கூலி மகத்தானது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால், நோய்களும் பல காரணங்களும் இந்த அருளிலிருந்து மனிதனை விலக்கி வைக்கின்றது. ஒருமுறை எனது உள்ளத்தில் :ஃபித்யா (நோன்பிற்கான பரிகாரம்) ஏன் நிர்ணயிக்கப்-பட்டிருக்கின்றது என்ற எண்ணம் வந்தது. அப்போது நோன்பு நோற்பதற்கான நல்வாய்ப்பு அவருக்கு கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் இது வைக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வந்தது. இறைவன் தான் இதற்கான நல்வாய்ப்பை வழங்குகின்றான். ஒவ்வொரு பொருளையும் இறைவனிடமே கேட்க வேண்டும். மேலான இறைவன் எல்லாவற்றிற்கும் ஆற்றல் உள்ளவனாவான். அவன் விரும்பினால் எலும்புருக்கி நோய் உள்ள ஒருவருக்கு கூட நோன்பு நோற்பதற்கான ஆற்றலை வழங்க முடியும். அந்த ஆற்றல் கிடைக்க வேண்டும் என்பதே :ஃபித்யா கொடுப்பதன் நோக்கமாகும். இது இறைவனின் அருளால் நடக்கின்றது. எனவே, எனது பார்வையில் (மனிதன்) இவ்வாறு துஆ செய்வது சிறந்ததாகும்.

என் இறைவா! இது உன்னுடைய அருளுக்குரிய ஒரு மாதமாகும். நான் அதிலிருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ளேன். வரவிருக்கும் ஆண்டில் நான் உயிருடன் இருப்பேனா? இல்லையா? விட்டுப்போன நோன்பை என்னால் நோற்க முடியுமா? முடியாதா? என்பது யாருக்கு தெரியும்? இவ்வாறு அவனிடம் நல்வாய்ப்பைக் கேட்கும் போது அத்தகைய உள்ளத்திற்கு அல்லாஹ் ஆற்றலை வழங்குவான் என்று எனக்கு உறுதி இருக்கின்றது.

இறைவன் விரும்பி இருந்தால் மற்ற சமுதாயங்கள் போன்றே இந்த சமுதாயத்திற்கும் எவ்வித கட்டுப்பாட்டையும் விதித்திருக்க மாட்டான். ஆனால், அவன் கட்டுப்பாடுகளை நன்மைக்காக வைத்துள்ளான். எனது

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தன்னை நபி என்று கூறியதனாலும், நாம் அன்னாரை நபி என ஏற்றுக் கொண்டதாலும், நாம் கத்மே நுவுவ்வத்தை மறுக்கின்றோம் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீதும் அன்னாரை எற்றுக் கொண்ட நம் மீதும் தொடர்ந்து முஸ்லிம்கள் குற்றம் சுமத்துகின்றனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நபித்துவ வாதம் செய்து ஜமாஅத்தை நிறுவியது முதல் எதிரிகள் நம் மீது இந்த குற்றச்சாட்டைச் சுமத்தி வருகின்றனர். ஆனால், உண்மை என்னவென்றால், அனைவரும் அறிந்தது போன்று இது முற்றிலும் பொய்யான குற்றச்சாட்டாகும்.**

**நீங்கள் முன்பை விட அதிகமாக இஸ்லாத்தின் போதனைகளைக் கற்றுக் கொண்டு நாங்கள் முஸ்லிம்கள் ஆவோம். நாங்கள் இஸ்லாத்தின் போதனைகளின்படி செயல்படுகின்றோம். நாங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை காத்தமுன்னபிய்யீன் என நம்புகிறோம். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப தோன்றியுள்ள வாக்களிக்கப்பட்ட மஸீஹை அன்னாரின் அடிமையாகவும், அன்னாரைப் பின்பற்றி நடக்கின்ற உம்மத்தி நபியாகவும் ஏற்றுக் கொண்டுள்ளோம் என்று நீங்கள் உங்கள் நண்பர்களிடம் கூறுங்கள்.**

**எப்போதெல்லாம் எதிர்ப்புகள் அதிகமானதோ அப்போதெல்லாம் எதிர்ப்புகள் ஜமாஅத்திற்கு உரமாகப் பயன்பட்டுள்ளது. எனவே, அதுபற்றி நமக்கு எந்த அச்சமும் இருந்ததில்லை. தற்போதும் இல்லை. இனியும் ஒருபோதும் அதைப் பற்றிய அச்சமும் இருக்கக் கூடாது. தற்போதைய இந்த எதிர்ப்பின் விளைவாகக் கூட இங்கு ஊடகங்கள் மூலமாக மிகப் பரந்த அளவில் ஜமாஅத்தின் அறிமுகம் ஏற்பட்டுள்ளது. அநேகமாக ஒருவேளை இதற்கு முன் ஒரு குறுகிய காலத்தில் அந்த அளவு நம் மூலமாக அறிமுகம் ஏற்படாமல் இருந்திருக்கலாம்.**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது எஜமானர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உயர் தகுதியை வெறும் அறிவிப்பூர்வமான வாதங்களால் மட்டும் நிரூபிக்கவில்லை. மாறாக, இஸ்லாத்தின் போதனைகளின் செயல் வெளிப்பாடாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் போதனையும் செயலும் இருந்தது**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 29 ஏப்ரல் 2016 அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 –ஆம் ஆண்டு ஷஹாதத் மாதம் 29 –ஆம் தேதி ஆற்றிய ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۔ اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۔ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۔

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தன்னை நபி என்று கூறியதனாலும், நாம் அன்னாரை நபி என ஏற்றுக் கொண்டதனாலும், நாம் கத்மே நுவுவ்வத்தை மறுக்கின்றோம் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீதும் அன்னாரை எற்றுக் கொண்ட நம் மீதும் தொடர்ந்து முஸ்லிம்கள் குற்றம் சுமத்துகின்றனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நபித்துவ வாதம் செய்து ஜமாஅத்தை நிறுவியது முதல் எதிரிகள் நம் மீது இந்த குற்றச்சாட்டைச் சுமத்தி வருகின்றனர். ஆனால், உண்மை என்னவென்றால், அனைவரும் அறிந்தது போன்று இது முற்றிலும் பொய்யான குற்றச்சாட்டாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் போதனைகளுக்கேற்பவே நாம் மற்ற எல்லா முஸ்லிம் பிரிவுகளை விடவும், மற்ற முஸ்லிம்களை விடவும் மிக அதிகமாக கத்மே நுபுவ்வத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ளோம். மேலும், நாம் நமது உள்ளங்களை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மீதான அன்பினால் நிரப்பக் கூடியவர்களாகத் திகழ்கின்றோம். மேலும், அன்னார் கொண்டு வந்த மார்க்கத்தை மற்ற எல்லா பிரிவுகளை விடவும் உலகில் அதிகமாக பரப்பக் கூடியவர்களாவோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் போதனைகளின் விளைவாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உயர் தகுதியை அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிகள் எந்த அளவிற்கு புரிந்துள்ளார்களோ அதில் இலட்சத்தில் ஒரு பங்கைக் கூட அஹ்மதி அல்லாத முஸ்லிம்கள் புரிந்து கொள்ளவில்லை.

எவ்வாறிருப்பினும், கத்மே நுபுவ்வத்தை அடிப்படையாகக் கொண்டு மற்ற முஸ்லிம்கள் தொடர்ந்து அஹ்மதிகளை எதிர்த்து வருகின்றனர். அவ்வப்போது ஏதாவது ஒரு வகையில் அதில் வேகத்தை வெளிப்படுத்துகின்றனர் அல்லது பெயர் தாங்கி உலமாக்களின் அமைப்புகள் முன்பை விட அதிகமாக முஸ்லிம்களை தொடர்ந்து தூண்டி விடுவதற்கு முயற்சிகள் செய்யப்படுகின்றன. கடந்த நாட்களில் கிளாஸ்கோவில் ஓர் அஹ்மதி ஷஹீதாக்கப்பட்டார். அதன் காரணமாக எதிரிகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள அவ்விஷயத்தில் மார்க்க உணர்வுகளைத் தூண்டுவதற்கு முயற்சி செய்தனர். ஆனால், இங்குள்ள அரசாங்கம் நமக்கு சாதகமான முடிவை எடுத்தாலும், இவ்விஷயத்தில் ஊடகங்கள் காட்டிய எல்லையற்ற ஆர்வத்தாலும், இங்குள்ள பெரும்பாலான முஸ்லிம் அமைப்புகளுக்கு குறிப்பாக பெரிய முஸ்லிம் அமைப்பிற்கு வருத்தம் தெரிவிக்க நேரிட்டது. எவ்வாறிருப்பினும், அத்துடன் அஹ்மதிகள் முஸ்லிம்கள் அல்லர் என்பதில் அவர்கள் பிடிவாதமாக நிலைநின்றனர். அதனை பள்ளிவாயில்களில் வெளிப்படையாக அறிவிப்பு செய்கின்றனர். கலிமா கூட சரியாகத் தெரியாத மற்றும் கத்மே நுபுவத் என்றால் என்ன? என்பது கூட தெரியாத முஸ்லிம் பிள்ளைகள் பள்ளிக்கூடங்களில் அஹ்மதி பிள்ளைகளைப் பார்த்து அஹ்மதிகளாகிய நீங்கள் முஸ்லிம்கள் இல்லை என்று கூறுகின்றனர். இவ்வாறு முஸ்லிம்களின் பிள்ளைகள் கூறும் அளவிற்கு பொது மக்களின் உள்ளங்களில் அவர்கள் விஷத்தை விதைத்துள்ளனர். சில அஹ்மதி சிறுவர்களும், சிறுமியர்களும் பள்ளிக்கூடத்தில் பயில்கின்ற முஸ்லிம்கள் எங்களுடன் இவ்வாறு நடந்து கொள்கின்றனர் என்று எனக்கு கடந்த நாட்களில் கடிதம் எழுதினர். நான் அவர்களுக்கு இதனையே கூறுவேன். நீங்கள் முன்பை விட அதிகமாக இஸ்லாத்தின் போதனைகளைக் கற்றுக் கொண்டு நாங்கள் முஸ்லிம்கள் ஆவோம். நாங்கள் இஸ்லாத்தின் போதனைகளின்படி செயல்படுகின்றோம். நாங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை காத்தமுன்னபிய்யீன் என நம்புகிறோம். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப தோன்றியுள்ள வாக்களிக்கப்பட்ட மஸீஹை அன்னாரின் அடிமையாகவும், அன்னாரைப் பின்பற்றி நடக்கின்ற உம்மத்தி நபியாகவும் ஏற்றுக் கொண்டுள்ளோம் என்று நீங்கள் உங்கள் நண்பர்களிடம் கூறுங்கள்.

எவ்வாறிருப்பினும், உலகின் பல்வேறு நாடுகளில் அவ்வப்போது அஹ்மதிகளுக்கு எதிராக இந்தப் பிரச்சனை எழுகின்றது. இப்போது ஊடகங்களின் காரணமாகவும், பயணங்களின் விரைவான சேவைகள் மற்றும் வசதிகளின் காரணமாகவும், எதிரிகள் எல்லா இடத்திற்கும் சென்று சேர்ந்து விடுகின்றனர். அதனால் எதிர்ப்பும் ஏற்படுகிறது. எனவே, குழப்பம் விளைவிக்கும் பெயர் தாங்கி முஸ்லிம்களிடமிருந்து இப்போது உலகின் எந்தவொரு நாடும் பாதுகாப்பாக இல்லை. இவர்கள் ஆப்பிரிக்காவின் சில பகுதிகளுக்கும் கூட சென்றடைந்து விடுகின்றனர். எங்கெல்லாம் நாத்திகவாதிகளோ அல்லது கிறிஸ்தவர்களோ அல்லது பெயர் தாங்கி முஸ்லிம்களோ இருக்கின்றார்களோ அந்த இடங்களுக்குச் சென்று விடுகின்றனர். அஹ்மதிகள் பள்ளிவாயில் கட்டினாலோ ஜமாஅத் உருவாக்கப்பட்டாலோ அங்கும் இவர்கள் சென்று விடுகின்றனர். இதற்கு முன் செல்லாத இடங்களுக்கும் கூட சென்று விடுகின்றனர்.

எவ்வாறிருப்பினும், இது இவர்களின் எதிர்ப்பின் ஆயுதங்கள் ஆகும். அதனை அவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். பள்ளிவாயில்களிலும், மத்ரஸாக்களிலும், குடும்பங்களிலும் இவர்கள் கொடுக்கின்ற போதனைகளின் தாக்கங்களுக்கு குழந்தைகளும் ஆளாகி விடுகின்றனர். இது இங்கும் நடக்கின்றது. ஐரோப்பாவிலும் நடக்கின்றது. ஆனால், இவர்கள் எங்கெல்லாம் வந்தடைகின்றனரோ அங்குள்ள ஒவ்வோர் அஹ்மதி குழந்தைகள், பிள்ளைகள் மற்றும் இளைஞர்கள் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை முழுமையாக அறிந்து கொள்வது அவர்களின் கடமையாகும். எந்த போதனையை இக்காலத்தில், காலத்தின் இமாம் விவரித்துக் கூறியுள்ளார்களோ அதனை அறிந்து கொள்ளுங்கள். மேலும் எந்த அடித்தளத்தில் அஹ்மதிய்யத் நிலைபெற்றுள்ளதோ அதனை அறிந்து கொள்ளுங்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் இறுதி ஷரீஅத்தைக் கொண்டு வந்த தூதர் ஆவார்கள். ஷரீஅத் அடிப்படையில் அன்னாரோடு நுபுவத் முற்றுப் பெற்று விட்டது. அதாவது, இனி எந்தவொரு புதிய ஷரீஅத்தும் வர முடியாது. மேலும், அதேபோன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின்

அடிமைத்துவத்தில் தோன்றியுள்ள உம்மத்தி நபி ஆவார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் புதிதாக எந்தவொரு ஷரீஅத்தையும் கொண்டு வரவில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஷரீஅத்தை உலகில் பரப்பவே அன்னார் தோன்றினார்கள். எவ்வாறிருப்பினும், நாம் எப்போதும் அல்லாஹ்வின் நடைமுறையைக் கண்டு வந்துள்ளோம். எப்போதெல்லாம் எதிர்ப்புகள் அதிகமானதோ அப்போதெல்லாம் எதிர்ப்புகள் ஜமாஅத்திற்கு உரமாகப் பயன்பட்டுள்ளது. எனவே, அதுபற்றி நமக்கு எந்த அச்சமும் இருந்ததில்லை. தற்போதும் இல்லை. இனியும் ஒருபோதும் அதைப் பற்றிய அச்சமும் இருக்கக் கூடாது. தற்போதைய இந்த எதிர்ப்பின் விளைவாகக் கூட இங்கு ஊடகங்கள் மூலமாக மிகப் பரந்த அளவில் ஜமாஅத்தின் அறிமுகம் ஏற்பட்டுள்ளது. அநேகமாக ஒருவேளை இதற்கு முன் ஒரு குறுகிய காலத்தில் அந்த அளவு நம் மூலமாக அறிமுகம் ஏற்படாமல் இருந்திருக்கலாம். இங்கு இந்த நாட்டிலும் மிக அதிக கவனம் ஏற்பட்டுள்ளது.

அடுத்து, நமது சில அஹ்மதி இளைஞர்கள் மார்க்கத்தில் ஆர்வமில்லாமல் இருந்தனர். ஜமாஅத்தோடு அவர்களுக்கு அதிக தொடர்பில்லாமல் இருந்தது. பெருநாள் அன்று மட்டுமே வந்து சென்றனர் அல்லது மிகத் தொலைவில் இருந்ததால் தொடர்பில்லாமல் இருந்தனர். ஆனால் ஊடகங்களின் மூலம் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை நபி என்று நம்புகின்றோம். ஆனால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றிய நபியாக ஏற்றுக் கொண்டுள்ளோம் என்பதையும் அவர்கள் புரிந்து கொண்டனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்திற்குரிய உரிமைகளை எவ்வாறு செலுத்தினார்கள்? மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் காத்தமுன்னபிய்யீன் என்பதற்குரிய அந்தஸ்தை அன்னார் எவ்வாறு நிலைநாட்டினார்கள்? மேலும் அது தொடர்பாக நமக்கு அன்னார் என்ன வழிகாட்டியுள்ளார்கள்? என்பது பற்றிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சில மேற்கோள்களை நான் எடுத்து வைக்கின்றேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''நன்றாக நினைவில் கொள்ளுங்கள். எதுவரை ஒருவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை காத்தமுன்னபிய்யீன் என நம்பிக்கை கொள்ள மாட்டாரோ அதுவரை அவர் முஸ்லிமாகவும் முடியாது. புதிய சடங்கு சம்பிரதாயங்கள் மற்றும் புதுவகையான திக்ர் மற்றும் பல்வேறு வகையான பித்அத்துகளை மார்க்கத்தில் இவர்கள் சேர்த்துள்ளனர். அவற்றிலிருந்து விலகாத வரை அவர்கள் முஸ்லிம்களாக முடியாது. (இந்த பித்அத்துகளை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மார்க்கத்தில் சேர்க்கவில்லை. அதனை பல்வேறு ஆலிம்கள் மற்றும் பீர்மார்கள் சேர்த்துள்ளனர்.) எதுவரை இவற்றிலிருந்து வெளிவர மாட்டார்களோ மேலும் எதுவரை தமது சொல்லாலும், செயலாலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை காத்தமுன்னபிய்யீன் என ஏற்றுக் கொள்ளமாட்டார்களோ அதுவரை ஒன்றுமே இல்லை.''

எனவே, இது வெறும் வாய்ப்பேச்சுகளால் அல்லாமல் செயல்ரீதியாகவும் அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை காத்தமுன்னபிய்யீன் என ஏற்றுக் கொள்வது அவசியமாகும். ஒருவர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் பின்னர் அவர் ஒரு பொருட்டே கிடையாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். ''ஸஆதி தமது ஃபார்ஸி கவிதையில் மிகச் சரியாக இவ்வாறு கூறுகின்றார்:

بزہد و ورع کوش و صدق و صفا
و لیکن میفزائے بر مصطفیٰ''

தூய்மை, இறையச்சம், உண்மை மற்றும் நன்றியுணர்வைப் பெறுவதற்கு கண்டிப்பாக முயற்சி செய்யுங்கள். ஆனால், ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் கற்றுத் தந்த வழிமுறைகளை விட்டு விலகிச் சென்று முயற்சி செய்யாதீர்.''

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''எந்த விஷயத்திற்காக தமது உள்ளத்தில் அல்லாஹ் உத்வேகத்தை வழங்கியுள்ளானோ அது, ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் நபித்துவத்தை நிலைபெறச் செய்ய வேண்டும் என்பது மட்டுமேயாகும். அதனை முழு மனித சமுதாயத்திற்காக இறைவன் நிலைநாட்டியுள்ளான். மேலும், இந்த மக்கள் தமது பித்அத்துகள் மூலம் உருவாக்கியுள்ள அனைத்து பொய் நபித்துவத்தையும் தூள் தூளாக்க வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். (இந்த மக்கள் புதிய புதிய பித்அத்துகளை உருவாக்கி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளிலிருந்து விலகி நிற்கின்றனர். உண்மையில் இவர்களே நபித்துவத்தின் முத்திரையை உடைக்கக் கூடியவர்கள் ஆவர்.) இந்த பீர்மார்கள் உருவாக்கியுள்ள அனைத்து வழிமுறைகளை வெளிப்படையாக ஆய்வு செய்து பாருங்கள். (நாம் கத்மே நுபுவ்வத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ளோமா? அல்லது அவர்களா? என பாருங்கள்.) வெறும் வாயளவில் மட்டும் காத்தமுன்னபிய்யீன் என்று கூறிக் கொண்ட மன இச்சைகளுக்கேறப் செயல்பட்டு தமக்கென புதிய ஷரீஅத்தை உருவாக்கிக் கொள்வதுதான் இறைவனின் பார்வையில் கத்மே நுபுவ்வத் என்று கூறுவதாக இருந்தால் இது அநீதியும் தீங்கு விளைவிக்கின்ற விஷயமும் ஆகும்.''

''சில முஸ்லிம் பிரிவுகள் பக்தாதி தொழுகைகள், மஅகூஸ் தொழுகைகள் என்ற வழிமுறைகளை உருவாக்கிக் கொண்டுள்ளனர். திருக்குர்ஆனிலோ ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் செயல்களிலோ இதற்கு ஆதாரம் உள்ளதா? அதேபோன்று யா ஷேக் அப்துல் காதிர் ஜெய்லானி ஷய்அன்லில்லாஹ்! என்று அழைப்பதற்கு திருக்குர்ஆனில் ஆதாரம் உள்ளதா? ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் காலத்தில் ஷேக் அப்துல் காதிர் ஜெய்லானி அவர்கள் பிறக்கக் கூட இல்லையே? அவ்வாறிருக்க இதனை யார் கற்றுத் தந்தது? வெட்கப்படுங்கள்! இஸ்லாமிய மார்க்கச் சட்டங்களைப் பின்பற்றுவதன் அழகு இதுதானா? நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். நீங்கள் இதுபோன்ற கொள்கைகளை ஏற்றுக் கொண்டு இதுபோன்ற செயல்களைச் செய்து விட்டு நான் காத்தமுன்னபிய்யீன் என்பதன் முத்திரையை உடைத்து விட்டேன் என என்னை குற்றம் சாட்ட உங்களுக்கு தகுதி உள்ளதா?

அசல் விஷயம் என்னவென்றால், நீங்கள் உங்களின் பள்ளிவாயில்களில் பித்அத்துகளை அனுமதிக்காமல் இருந்திருந்தால் மேலும் காத்தமுன்னபிய்யீன் என்பதில் உண்மையான உள்ளத்துடன் நம்பிக்கை கொண்டு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரியை முழுமையாகப் பின்பற்றியிருந்தால் பின்னர் எனது வருகைக்கு என்ன அவசியம் இருந்திருக்கும்? உங்களுடைய இந்த புதிய பித்அத்துகளின் காரணமாகவே அல்லாஹ்வின் தன்மானம் வெளிப்பட்டது. அவன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அடிச்சுவட்டில் ஒருவர் தோன்றி அவர் மூலமாக இந்த பொய் நபித்துவத்தின் சிலைகளை அழித்து விட விரும்பினான். எனவே, இறைவன் என்னை இந்தப் பணிகளுக்காகவே அனுப்பியுள்ளான்.''

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''பீர்மார்களுக்கு முன்னால் சஜ்தா செய்வது அல்லது அவர்களின் இடங்களை வலம் வருவது போன்றவையெல்லாம் மிக அசாதாரண விஷயமாகும். சுருக்கமாக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உயர் தகுதி மற்றும் கண்ணியத்தை உலகில் மீண்டும் நிலைநாட்டவே இறைவன் இந்த ஜமாஅத்தை நிறுவியுள்ளான். ஒரு மனிதர் நேசத்திற்குரியவராக உள்ளார். ஆனால் அவரைப் போன்று இன்னும் ஆயிரம் பேர் இருந்து அவர்களோடு நீங்கள் நேசம் கொள்ள ஆரம்பித்து விட்டால் அவர் மீதான நேசத்திற்கு என்ன சிறப்பம்சம் உள்ளது? உங்களுக்கு ஒருவர் மீது அன்பு உள்ளது. அவருக்கு நிகரான ஆயிரம் பேர் பிறந்து விட்டால் எவர் மீது உங்களுக்கு அன்பு உள்ளதோ அவர் மீதான அன்பிற்கு என்ன முக்கியத்துவம் இருக்க முடியும்?''

இவர்கள் வாதம் செய்வது போன்று இவர்களுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது அன்பும், பற்றும் இருக்கும் என்றால் ஆயிரக்கணக்கான கபர்களை ஏன் இவர்கள் உருவாக்கி வைத்துள்ளார்கள்? இவர்கள் மதீனாவிற்குச் செல்கின்றனர். ஆனால், அஜ்மீர் மற்றும் ஏனைய கபர் வணக்கஸ்தலங்களுக்கும் செல்கின்றனர். அங்கு செல்லும் போது வெறும் தலையுடனும் வெறும் காலுடனும் செல்கின்றனர். பாக்பத்தனின் சன்னல்களைக் கடந்து செல்வத்தை இரட்சிப்பிற்குப் போதுமானதாகக் கருதுகின்றனர். இந்த மக்கள் இந்தியா, பாகிஸ்தானில் தோன்றிய வலிமார்களின் கபர்களுக்குச் சென்று அதனை வணங்கக்கூடிய மக்கள் ஆவர். வெறுமனே அந்த இடங்களிலுள்ள சன்னல் மற்றும் கதவுகளைக் கடப்பதே போதுமானது. எந்த செயல்களுக்கும் அவசியமில்லை. அதுவே நமது இரட்சிப்பிற்கான வழி என்று அவர்கள் கருதுகின்றனர்.

சிலர் கொடிகளை நட்டி வைத்துள்ளனர். வேறு சிலரோ வேறு வழிமுறைகளை உருவாக்கி வைத்துள்ளனர். இந்த மக்களின் திருவிழாக்களையும் கூட்டங்களையும் கண்டு ஒரு உண்மையான முஸ்லிம்களின் உள்ளம் நடுங்கி விடுகின்றது. இவர்கள் என்ன உருவாக்கி வைத்துள்ளார்கள்? என அச்சம் ஏற்படுகிறது. இறைவனுக்கு இஸ்லாத்தின் மீதான தன்மானம் இல்லாமல் இருந்திருந்தால் إِنَّ الدِّينَ عِنْدَ اللَّهِ الْإِسْلَامُ *இன்ன தீன இன்தல்லாஹி இஸ்லாம்* – நிச்சயமாக அல்லாஹ்வின் பார்வையில் இஸ்லாமே மார்க்கமாகும் (3:20) என்ற கூற்று இறை கூற்றாக இல்லாமல் இருந்திருந்தால் إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ 'மேலும் நாமே இதனை இறக்கினோம். மேலும் நாமே அதனைப் பாதுகாப்போம்' என்று இறைவன் கூறாமல் இருந்திருந்தால், நிச்சயமாக இன்று இஸ்லாம் அழிவிற்குள்ளாகி இருக்கும். அந்நிலையில் எவரும் எந்த ஐயமும் கொள்ள மாட்டார். ஆனால், அல்லாஹ்வின் தன்மானம் பொங்கி எழுந்தது. அவனது அருள் மற்றும் பாதுகாப்பிற்கான வாக்குறுதியின் தேட்டம் உலகில் மீண்டும் ரஸூல் (ஸல்) அவர்களின் நிழலை அனுப்ப வேண்டியதிருந்தது. மேலும் இக்காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நபித்துவத்தை புத்தம் புதிதாக உயிரூட்டிக் காட்ட வேண்டும் என அல்லாஹ் நாடினான். எனவே, அவன் இந்த ஜமாஅத்தை நிறுவினான். மேலும் என்னை நபியாகவும், மஹ்தியாகவும் அவன் அனுப்பினான். (மல்.்.பூஸாத் தொகுதி 3, பக்கம் 90-92; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அடுத்து, வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகையின் அசல் நோக்கத்தை எடுத்துரைத்தவாறு அன்னார் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: ''ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கம்பீரத்தை உலகில் வெளிப்படுத்துவதே எமது வருகையின் அசல் நோக்கமாகும். மேலும் அன்னாரின் மகத்துவத்தை நிலைநாட்ட வேண்டும் என்பதும் ஆகும். நமது பெயர் குறிப்பிடுவது என்பது இரண்டாம் பட்சமானதாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அருள் செய்யக்கூடியவர்கள் மற்றும் அன்னார் பயனளிக்கக் கூடியவர்கள் ஆவர். ஆக, இந்த அருள் மற்றும் பயனின் விளைவாகவே எனது பெயர் நினைவு கூறப்படுகிறது. (மல்.்.பூஸாத் தொகுதி 3, பக்கம் 269; 1985 ஆம் ஆண்டு பதிப்புஇங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) இது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அருளேயாகும். அந்த அருள் தான் ஹஸ்ரத் ம்ஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இந்த அந்தஸ்தை வழங்கியுள்ளது.

எனவே, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அருளின் வட்டமானது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை தன்னுள்ளே ஈர்த்துக் கொண்டது. அதன் விளைவாகத்தான் பெருமானார் (ஸல்) அவர்களது உண்மைப் பேரன்பரின் பெயரும் நினைவு கூறப்படுகிறது.

அடுத்து தமது வருகையின் நோக்கத்தை விவரித்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: “முஸ்லிம்களிடம் ஆயிரம் ஆண்டுகளில் நிலவிய இருளின் காரணமாக புது விஷயங்களும், பித்அத்துகளும் நுழைந்தன. அவற்றை சீர்திருத்த வேண்டியதிருந்தது.”

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: “இறைவன் புறமிருந்து வரக்கூடியவர்கள் தீய விஷயம் எதுவும் கூறுவதில்லை. இறைவனை மட்டுமே வணங்குங்கள். படைப்பினங்களுக்கு நன்மை செய்யுங்கள். தொழுகையை நிறைவேற்றுங்கள் என்று மட்டுமே அவர்கள் கூறுவர். மேலும் மார்க்கத்தில் ஏற்பட்ட கேடுகளை அவர்கள் அகற்றுகின்றனர். எனவே, நான் தற்போது இந்தக் கேடுகளை அகற்றுவதற்காகவே வந்துள்ளேன். இருண்ட காலக்கட்டத்தில் முஸ்லிம்களிடம் ஏற்பட்டுள்ள தவறுகளைக் களைய நான் அனுப்பப்பட்டுள்ளேன்.

மாபெரும் தவறு என்னவென்றால், இறைவனுடைய கம்பீரத்தையும் கண்ணியத்தையும் மண்ணோடு மண்ணாக்கி விட்டனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் போதித்த உண்மையான மற்றும் உயர் தரம் வாய்ந்த ஏகத்துவத்தை சந்தேகத்திற்கு உள்ளாக்கி விட்டனர். ஒருபுறம் இயேசு உயிருடன் இருக்கிறார். ஆனால் உங்களுடைய நபி (ஸல்) அவர்கள் உயிருடன் இல்லை என கிறித்தவர்கள் கூறுகின்றனர். அவர்கள் இதன் மூலம் ஹஸ்ரத் ஈஸாவை இறைவனாகவும், இறை மகனாகவும் ஆக்குகின்றனர். அவர்களைப் பொறுத்தவரை இயேசு 2000 ஆண்டுகளாக உயிருடன் இருந்து வருகிறார். காலத்தின் தாக்கம் அவர் மீது எவ்வகையிலும் ஏற்படவில்லை. மற்றொரு பக்கம் ஈஸா (அலை) அவர்கள் வானத்திற்கு உயிருடன் சென்று விட்டார். இரண்டாயிரம் ஆண்டுகளாக இதுவரை அவர் உயிருடன் இருக்கிறார். அவரின் நிலையிலும், உடலிலும் எந்த மாற்றமும், தாக்கமும் ஏற்படவில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களோ மரணித்து விட்டார்கள் என முஸ்லிம்கள் அக்கருத்தினை ஒப்புக் கொண்டு விட்டனர்.

நான் ஒரு முஸ்லிம் மவ்லவியின் வாயிலிருந்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணித்து விட்டார்கள் எனக் கூறுவதைக் கேட்கும் போது நான் உண்மையாகவே கூறுகிறேன். எனது உள்ளம் நடுநடுங்கி விடுகிறது. உயிருள்ள நபியை மரணித்தவராக ஆக்கி விட்டனர். இதை விட இஸ்லாத்திற்கு அவமானம், வேறென்ன இருக்க முடியும்? ஆனால் இது உண்மையில் முஸ்லிம்களின் தவறாகும். அவர்கள் திருக்குர்ஆனின் தெளிவான கூற்றிற்கு எதிராக புதிதாக ஒரு விஷயத்தை உருவாக்கிக் கொண்டனர். திருக்குர்ஆனின் மஸீஹின் மரணம் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. உண்மையில் இந்த தவறுகளை அகற்றுகின்ற பொறுப்பு என்னிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஏனென்றால், இறைவன் எனக்கு *ஹகம்* எனப் பெயரிட்டுள்ளான். இப்போது எவர் தீர்ப்பு வழங்கி விடுவாரோ அவரே அந்த தவறை அகற்றுவார். உலகம் அவரை ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால், இறைவன் அவரை ஒப்புக் கொள்வான். வலுவான தாக்குதல்கள் மூலம் அவரின் உண்மையை வெளிப்படுத்தி விடுவான். இத்தகைய விஷயங்கள் உலகிற்கு பேரிழப்பை ஏற்படுத்தி இருக்கின்றது.

தற்போது பொய் வெளிப்படுவதற்குரிய நேரம் வந்து விட்டது. இறைவன் எவரை *ஹகம்* ஆக அனுப்பியுள்ளானோ அவரிடமிருந்து இவ்விஷயங்கள் மறைந்திருக்க முடியாது. திருக்குர்ஆனின் தெளிவான தீர்ப்பு கூறி விட்டது. இறுதி கலீஃபா வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருப்பார். அவர் வந்து விட்டார். இப்போதும் இருள் நிறைந்த காலத்தில் உருவான தவறான கொள்கைகளில் ஒருவர் பிடிவாதமாக இருந்தால் அவர் தமக்குத்தாமே நஷ்டம் விளைவித்துக் கொள்வதோடு மட்டுமல்லாமல் இஸ்லாத்திற்கு நஷ்டத்தை ஏற்படுத்தும் நபராகவே கருதப்படுவார். உண்மையில் இந்த தவறான மற்றும் அசுத்தமான கொள்கை இலட்சக்கணக்கான மக்களை முர்தத் ஆக்கி விட்டது. இந்தக் கொள்கை இஸ்லாத்திற்கு கடுமையான கண்ணியக்குறைவை ஏற்படுத்தியுள்ளது. மேலும் அந்தக் கொள்கை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு செய்யப்பட்ட அவமரியாதை ஆகும். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தான் மரணித்தவர்களை உயர்ப்பிக்கக் கூடியவர். வானத்திற்கு ஏறிச் சென்றவர் மற்றும் இறுதிக் காலத்தில் நீதி தீர்ப்பவர் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டால் (அல்லாஹ் நம்மை இதிலிருந்து காப்பானாக) பின்னர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒன்றுமற்றவர் ஆகி விடுவார்கள். உண்மையில் அன்னாரை ரஹ்மத்துல் லில் ஆலமீன் (அகில உலகங்களுக்கும் ஓர் அருட்கொடை) என்றும், அன்னார் அனைத்து மக்களுக்கும் தூதராக வந்துள்ளார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. அன்னார் தான் காத்தமுன்னபிய்யீன் (நபிமார்களின் முத்திரை) ஆவார்கள். முஸ்லிம்கள் என்று அழைக்கப்படக்கூடிய அந்த மக்களின் கொள்கை இதுவுமாகும். தற்போதுள்ள பறவைகளில் சில ஹஸ்ரத் மஸீஹ் படைத்ததாகும். சிலவற்றை இறைவன் படைத்ததாகும் என்று நம்புகின்றனர். அல்லாஹ் நம்மை காப்பானாக! நான் ஒருமுறை ஓர் ஏகத்துவவாதியிடம் கேட்டேன். தற்போது உங்களிடம் சில பறவைகள் தரப்பட்டால் அதில் எது இறைவனுடையது? எது மஸீஹ் படைத்தது? என்று கேட்டால் என்ன கூறுவீர்கள்? என்று கேட்டேன். அதற்கு அவர் இரண்டும் கலந்து விட்டன என்று கூறினார்.” (மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 251-252; 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சில வழிகாட்டல்கள், சம்பவங்களை எடுத்துரைக்கிறேன். அதிலிருந்து அன்னாரின் வாழ்க்கை வரலாற்றின் சில அம்சங்கள் வெளிப்படும். அதன் மூலமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது எஜமானர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உயர் தகுதியை வெறும் அறிவிப்பூர்வமான வாதங்களால் மட்டும் நிரூபிக்கவில்லை. மாறாக, இஸ்லாத்தின் போதனைகளின் செயல் வெளிப்பாடாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் போதனையும் செயலும் இருந்தது என்பதை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள்.

ஒருமுறை அப்துல் ஹக் என்றவொரு இளைஞர் வந்தார். அவர் கல்லூரி மாணவர் ஆவார். அவர் முஸ்லிமாக இருந்து, பின்னர் கிறிஸ்தவராக மாறி விட்டார். முன்பே கூறப்பட்டது போன்று ஏராளமான மக்கள் இந்த தவறான கொள்கையின் காரணமாக இஸ்லாத்தை விட்டு விட்டு கிறிஸ்தவர்களாக மாறி இருந்தனர். இவரும் அந்த மக்களில் ஒருவராவார். உண்மையைத் தேடி அல்லது அறிவு அளவிலான ஆராய்ச்சிக்காக இவரும் காதியான் வந்தார். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கொஞ்ச காலம் தங்கினார். பல்வேறு சந்திப்புகளில் பல்வேறு மார்க்க விஷயங்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவருக்கு எடுத்துரைத்தார்கள்.

ஒருநாள் அவர் கூறினார்: “நான் ஒருமுறை ஒரு கிறிஸ்தவரின் முன்பு உங்கள் பெயரைக் கூறினேன். அதற்கு அவர் உங்களை ஏசிப் பேசினார். அதைக் கேட்ட எனக்கு அது மிகவும் அநாகரீகமாகத் தென்பட்டது என்று அந்த இளைஞர் கூறினார். (இது உங்களின் உயர் நன்னடத்தையையும் வெளிப்படுத்துகிறது என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்.) என்னை ஏசிப் பேசியதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஏராளமான கடிதங்கள் நம்மை ஏசிப் பேசி வருகின்றன. அவற்றைப் பெறுவதற்கு Postage –ற்கான பணம் செலுத்தி பெற வேண்டியதுள்ளது. அதனை பிரித்துப் பார்க்கும்போது ஏச்சுப் பேச்சாக இருக்கின்றது. பிரசுரங்கள் மூலம் ஏசிப் பேசுகின்றனர். (பாகிஸ்தானில் இன்றும் இதே தபால் கவரில் ஏசிப் பேசி அனுப்புகின்றனர்.) ஆனால் இறைவனது ஒளியை எவராது தமது வாயால் அணைத்து விட முடியுமா? எனவே, இவ்விஷயங்களால் நமக்கு எந்த நட்டமும் இல்லை. என்றென்றும் நபிமார்கள் மற்றும் இறை அடியார்களுடன் நன்றி கெட்டவர் இவ்வாறே நடந்து வந்துள்ளனர்.” அவர் கிறிஸ்தவராக இருந்தார்.

எனவே, இயேசுவின் உதாரணத்தைக் கூறியவாறு அவரிடம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: “இயேசுவுடன் என்ன நடந்தது? சிலுவையில் அறையப்பட்டார். அவரை ஏசிப் பேசினர். அடுத்து நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் என்ன நிகழ்ந்தது? இதுவரை தூய்மையற்ற இயல்பு கொண்ட மக்கள் ஏசிப் பேசுகின்றனர். நான் மனித இனத்தின் உண்மையான நலம் விரும்பி ஆவேன். எவர் என்னை தனது எதிரியாகக் கருதுகின்றாரோ அவர் சுயமே தனது ஆன்மாவிற்கு எதிரியாவார்.” (மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 126; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) நான் கூறியது போன்று அப்துல் ஹக் என்ற அந்த நபருடன் பல நாட்கள் உரையாடல் நடந்து வந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவரின் பல கேள்விகளுக்கு பதிலளித்து வந்தார்கள்.

ஒருநாள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவரிடம் கூறினார்கள்: “நான் உங்களிடம் மீண்டும் மீண்டும் கூறுவேன். எதுவரை, ஒரு விஷயம் உங்களுக்குப் புரியவில்லையோ அதுவரை உங்களது ஐயத்தை என்னிடம் கேட்டுக் கொண்டே இருங்கள். அவ்வாறல்லாமல் ஒரு விஷயத்தை நீங்கள் புரியா விட்டாலும் நான் புரிந்து கொண்டேன் எனக் கூறுவது நல்லதல்ல. அதன் விளைவு தீயதாகும்.” இது அன்னார் அவருக்கு வழங்கிய ஊக்கமாகும். அன்னார் மீண்டும் மீண்டும் கேட்கும்படி கூறினார்கள். மக்களிடம் உண்மை வெளிப்பட வேண்டும்; அதை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஒரு துடிப்பு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இருந்தது. அந்த இளைஞர் சிராஜுத்தீன் என்ற கிறிஸ்தவரையும் நன்கு அறிந்திருந்தார். அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கேள்வி கேட்டார். அதற்கு அன்னார் பதிலும் அளித்திருந்தார்கள். அது புத்தகமாகவும் வெளி வந்தது.

அதனைக் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: “இங்கு வந்திருந்த சிராஜுத்தீன் கூட அவ்வாறே செய்தார். எந்த பயனையும் அவர் பெறவில்லை. அதாவது, கேள்வி மட்டும் கேட்பார். பின்னர் மௌனமாக இருப்பார். நாம் கொடுக்கும் விளக்கம் தொடர்பாக எந்தக் கேள்வியும் கேட்க மாட்டார். அவர் இங்கு வந்து தங்கியிருந்தாலும் எந்தப் பலனும் பெறவில்லை. ஒவ்வொரு விஷயத்திலும் ஆமாம், சரிதான் என்றே கூறி வந்தார். நல்லெண்ணத்துடன் உள்ளத்தில் தோன்றிய ஐயங்களைக் களைய முயற்சி செய்யவில்லை.” ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் மேற்கொண்டு எந்த ஐயத்தையும் கேட்கவில்லை. மாறாக, தான் எழுதிக் கொண்டு வந்த கேள்விகளை மட்டுமே கேட்டார். ஆமாம், சரி என்றே கூறி வந்தார். அந்த

இளைஞரிடம், சிராஜுத்தீன் உங்களிடம் ஏதாவது கூறினாரா? என ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கேட்டார்கள். அப்துல் ஹக் என்ற பெயர் கொண்ட அந்த இளைஞர் கூறினார். ஆம்! அவர் என்னை தடுத்து வந்தார். நீ காதியான் செல்லாதே! நாம் கிறிஸ்தவம் என்றவொரு உண்மையைப் பெற்ற பிறகு இன்னும் உண்மையைத் தேடி அலைய உனக்கு என்ன நேரிட்டது? எனக் கூறினார். மேலும் அவர் இதனையும் என்னிடம் கூறினார். நான் காதியான் சென்றிருந்த போது என்னை வழியனுப்புவதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் மூன்று மைல் தூரம் வந்தார்கள். மேலும் வியர்வை வந்திருந்தது. அவரை வழியனுப்ப மூன்று மைல் தூரம் சென்றிருந்தார்கள். இதுவும் அன்னார் வெளிப்படுத்திய விருந்தோம்பலின் உயர் தரமான தருணமாகும்.

பத்ர் பத்திரிகையின் ஆசிரியர் பத்ர் பத்திரிகையில் ஒரு குறிப்பு எழுதி இருந்தார்கள்: ''தூய இயல்பு கொண்டவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் இந்தப் பரிவு மற்றும் அனுதாபத்தை ஆராய்ந்து பாருங்கள். மேலும் ஒருவரின் ஆன்மாவைக் காப்பாற்ற அன்னாரிடம் இருந்த துடிப்பை எண்ணிப் பாருங்கள். மூன்று மைல் தூரம் சென்றது அனுதாபத்தின் விளைவாக அல்லாமல் வேறு என்னவாக இருக்க முடியும்? ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் சிராஜுத்தீன் என்ற கிறிஸ்தவருடன் சென்றார்கள் என்றால் அது வெறும் அனுதாபத்தின் காரணமாகவே சென்றார்கள். இல்லையென்றால் சிராஜுத்தீனுடன் செல்வதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கு என்ன அவசியம் இருந்தது? எனவே, தூய இயல்பு கொண்டவர் அன்னாருடைய இந்த அனுதாப உணர்வை மட்டுமே கண்டு உண்மையைப் பெற்றுக் கொள்ள முடியும். உண்மையான உணர்வு படைத்தவரே! உம் மீது இறைவனின் சாந்தி உண்டாவதாக! இறைவா! அமைதி நிறைந்த மனிதருக்கு நீ அமைதியை வழங்குவாயாக!''

ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் தமக்கு வந்த வியர்வையைப் பற்றி அன்னார் கூறுகின்றார்கள்: வியர்வை வந்ததற்குக் காரணம் அவரது கேள்விக்கு பதில் கிடைக்காததுதான் என்று அவர் புரிகிறார். ஆனால், அந்தோ பரிதாபம்! அவ்வாறென்றால் அவர் இங்கு தங்கியிருந்த போது ஏன் தொழுது வந்தார்? என நீங்கள் அவரிடம் கேளுங்கள். அவர் என்னிடம் மன நிறைவு கிடைத்தது என்றெல்லாம் கூறினார். அவர் என் முன் இருந்தால் நான் அவரிடம் சத்தியம் செய்து கூறுமாறு கூறி இருப்பேன். என் முன்னால் வந்தால் கண்டிப்பாக வெட்கப்படுவார். அப்துல் ஹக், நான் அவரிடம் தொழுகையின் நிலை பற்றி கேட்டேன் என்று கூறினார். அதற்கு, ஆம்! நான் தொழுது வந்தேன். மேலும் இது குறித்து முடிவு எடுப்பதற்காக ஏதாவது குளிர்ந்த இடத்திற்குச் செல்வேன் என சிராஜுத்தீன் கூறினார். மேலும் மிர்ஸா சாஹிப் புகழ் விரும்பி ஆவார். நான் அவரிடம் நான்கு கேள்விகள் கேட்டேன். உடனே அவர் அதற்குரிய பதிலை நூலாக வெளியிட்டார் என்றும் கூறினார்.''

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''இதில் புகழை விரும்புவதற்கான கேள்விக்கே இடமில்லை. நாம் ஏன் உண்மையை மறைக்க வேண்டும்? நாம் அவ்வாறு மறைத்தால் பாவம் செய்தவராகி விடுவோம். குற்றமாக அது அமையும். இறைவன் என்னை நபியாக அனுப்பி இருக்கும் போது நான் கண்டிப்பாக உண்மையை வெளிப்படுத்துவேன். என்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை நான் படைப்பினங்கள் வரை கண்டிப்பாகக் கொண்டு சேர்ப்பேன். மேலும் என்னைப் பற்றி எவர் புகழ் விரும்பி என்று கூறினாலும் அல்லது வேறு ஏதாவது கூறினாலும் நான் சற்றும் பொருட்படுத்தமாட்டேன். நீங்கள் அவரை இங்கு வந்து இன்னும் கொஞ்ச நாட்கள் தங்கி விட்டுச் செல்லுமாறு கடிதம் எழுதுங்கள்'' என ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் அப்துல் ஹக்கிடம் கூறினார்கள்.

எனவே, எந்தப் பணிக்காக அன்னாரை அல்லாஹ் அனுப்பினானோ அந்தப் பணியை ஒரு மனிதரோடு மட்டும் சார்ந்ததாக அவர்கள் கருதவில்லை. மாறாக, இதன் மூலம் இஸ்லாத்தின் உண்மை வெளி வரும் என்பதால் அன்னார் அதனை வெளியிட்டார்கள். அன்னார் சில பெயர் தாங்கி மக்களுக்காக மட்டும் அந்நூலை வெளியிடவில்லை. எனவே, அன்னாருடைய ஒவ்வொரு செயலும் இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கண்ணியத்தை நிலைநாட்டுவதற்காகவே நிகழ்ந்தது. எவ்வாறிருப்பினும் அப்துல் ஹக் என்ற அந்த இளைஞருக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடன் உலாவச் சென்ற போது ஏராளமான உரையாடல்கள் நிகழ்ந்து வந்தன. சிராஜுத்தீனை பற்றிய கேள்விக்கு பதில் அளித்து வந்த போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் தமது வீட்டை அடைந்தார்கள்.

அப்போது அப்துல் ஹக் சாஹிபை நோக்கி கூறினார்கள்: ''தாங்கள் எமது விருந்தினர் ஆவீர்கள். எவர் எவ்வித கூச்சமும் இன்றி விருந்தினராக இருப்பாரோ அவர் மன மகிழ்ச்சியைப் பெற முடியும். உங்களுக்கு என்ன தேவை இருந்தாலும் எவ்வித தயக்கமுமின்றி என்னிடம் கேளுங்கள்.''

அடுத்து தமது ஜமாஅத்தை நோக்கி கூறினார்கள்: ''இவர் நமது விருந்தினர் ஆவார். உங்களில் ஒவ்வொருவரும் இவருடன் முழுமையான நல்லொழுக்கத்துடன் நடந்து கொள்வது உங்களுக்கு அவசியமாகும். அவருக்க எவ்வகையிலும் துன்பம் ஏற்படாமல் இருக்க நீங்கள் முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு கூறி விட்டு அன்னார் வீட்டிற்குள் சென்று விட்டார்கள்.'' (மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 110-113; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) ஆக, ஒவ்வொரு தனி நபரின் விருந்தோம்பலையும் அன்னார் கருத்தில் கொண்டிருந்தார்கள். உண்மையைத் தேடி ஒருவர் வருகின்றார் என்றால் முதலில் அவருக்கு சரியாக தூதுச் செய்தி கிடைக்க வேண்டும். இரண்டாவது, விருந்தினர் என்ற முறையில் அவருக்கு வெளிப்படையான முறையில் ஓய்வும் அவருக்கு முழுமையாகக் கிடைக்க வேண்டும்.

ஒரு நோயாளியை நலம் விசாரிக்கச் சென்ற சம்பவத்தை எடுத்துரைக்கிறேன். ஆனால் இதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் துஆ பற்றிய குறிப்பில் இன்றைய பீர்மார்களைப் போன்று தனது பெருமையை எடுத்துரைக்கவில்லை. நான் துஆ செய்தால் அது ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் கூறவில்லை. மாறாக, அல்லாஹ்வின் ஏகத்துவம் மற்றும் துஆ ஒப்புக் கொள்ளப்படுவதன் தத்துவத்தையும் கூறினார்கள். மேலும் தனது நிலையை இறை திருப்திக்கேற்பவே ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று கூறினார்கள். சம்பவம் இவ்வாறாகும்:

குறைஷி சாஹிப் என்ற நபர் ஒருவர் பல நாட்களாக நோயாளியாக தாருல் அமானில் இருந்து வந்தார். ஹக்கிமுல் உம்மத்திடம் அதாவது மவ்லானா நூருத்தீன் சாஹிப் (ரலி) அவர்களிடம் சிகிச்சைக்காக வந்தார். பலமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடம் துஆவுக்காக விண்ணப்பித்ததாக அன்னார் கூறினார்கள். நாம் துஆ செய்வோம் என்று கூறினோம். அவர் ஹஸ்ரத் ஹக்கிமுல் உம்மத் மூலமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை சந்திக்கும் நற்பாக்கியத்தைப் பெற விரும்புகிறேன் என அவர் கூறினார். ஆனால் பின்னர் எனது கால்கள் வீங்கி இருப்பதால் என்னால் வர இயலவில்லை எனக் கூறினார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் ஆகஸ்டு 11 ஆம் தேதி தாமே நேரில் வந்து சந்திப்பதாக வாக்களித்தார்கள். அந்த அடிப்படையில் வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டு குத்தாம்களுடன் உலாவுவதற்காக வெளியேறிய போது அந்த நபர் எங்கு வசித்து வந்தாரோ அங்கு சென்றார்கள். நீண்ட நேரம் நோயின் நிலை குறித்து கேட்டறிந்தார்கள். அதன் பிறகு தப்லீக் செய்தார்கள். தப்லீகின் எந்தவொரு சந்தர்ப்பத்தையும் அவர்கள் கை நழுவ விட்டதில்லை.

அன்னார் கூறினார்கள்: ''நீங்கள் கேட்டுக் கொண்டதற்கேற்ப நான் துஆ செய்தேன். ஆனால், அசல் விஷயம் என்னவென்றால், எதுவரை அல்லாஹ்வின் விருப்பமும், கட்டளையும் இல்லையோ அதுவரை எனது துஆவினால் ஒன்றும் நிகழாது. ஏழை, எளியவருக்கு எந்த அளவிற்கு துன்பங்கள் உள்ளன. ஆனால், அதிகாரி சற்று அவர்களை நோக்கி கவனம் செலுத்தினால் அந்த கஷ்டங்கள் குறைந்து விடுகின்றன. (அதாவது, ஏழைகள் இருக்கின்றனர். அவர்கள் தமது தேவையைப் பூர்த்தி செய்ய ஆட்சியாளர்களிடம் சென்று அவர்களிடம் முறையிட்டு அவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யும் வகையில் ஆட்சியாளர்கள் சிறிது வழங்கினால் அவருடைய கஷ்டங்கள் நீங்கி விடுகின்றன.) அதுபோல அல்லாஹ்வின் கட்டளையினால் தான் அனைத்தும் நிகழ்கின்றன. அல்லாஹ்வின் புறமிருந்து கட்டளையும், அனுமதியும் கிடைக்கும் பட்சத்தில்தான் நான் துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுவதை உணர்கின்றேன். ஏனென்றால் அவன் *உத்வூனீ* என்னை அழையுங்கள் என்று கூறியுள்ளான். ஆனால், அத்துடன் *அஸ்தஜிப்லகும்* (40:61) அதாவது நான் உங்கள் பிரார்த்தனைகளைக் கேட்பேன் என்றும் கூறியுள்ளான்.'' ஆனால் நான் துஆக்களைக் கேட்பதில் கட்டளையும், அனுமதியும் இணைந்துள்ளது. அதற்கு இறைவனின் கூற்றை ஏற்றுக் கொள்வதும், அவனை வணங்குவதும் நிபந்தனையாகும்.

''அடியான் தம்மிடத்தில் ஒரு தூய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். தமக்குள்ளேயே இறைவனுடன் சமாதானம் செய்து கொள்வதும் அவசியமாகும். மேலும், அடியார் உலகில் தாம் எந்த நோக்கத்திற்காக வந்துள்ளார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். மேலும் எந்த அளவுக்கு அந்த நோக்கத்தை முழுமை செய்ய முயற்சி செய்துள்ளார் என்பதையும் ஆய்வு செய்ய வேண்டும். எதுவரை மனிதன் இறைவனை மிகக் கடுமையான கோபத்திற்கு ஆளாக்கி விட மாட்டானோ அதுவரை அந்த மனிதன் எந்தத் துன்பத்திற்கும் ஆளாக மாட்டான். ஆனால், மனிதன் மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டால் பின்னர் இறைவன் கண்டிப்பாக அருள்பாலிப்பான். அப்போது மருத்துவமும் பயனளிக்கின்றது. அதாவது அல்லாஹ் அருள் செய்து விடும் போது அவன் மருத்துவருக்கும் அது தொடர்பான அறிவை வழங்கி விடுகிறான். அதாவது, அல்லாஹ் அருள் செய்யும் போது மருத்துவருக்கும் சரியான முறையில் நோயைக் கண்டறிவதற்கான ஆற்றலையும் அறிவையும் வழங்கி விடுகின்றான்.''

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறினார்கள்: ''இறைவனுக்கு எந்த விஷயமும் கடினமல்ல. மாறாக, إِنَّمَا أَمْرُهُ إِذَا أَرَادَ شَيْئًا أَنْ يَقُولَ لَهُ كُنْ فَيَكُونُ என்பது அவனது மகிமையாகும். அவன் ஒரு விஷயத்தை நாடும்போது அதனை ஆகி விடு என்று கட்டளையிடுகின்றான். உடனே அது ஆகத் தொடங்கி விடுகிறது.'' (36:83)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறினார்கள்: ''நான் ஒருமுறை பத்திரிகையில் படித்தேன். ஒரு டெபுட்டி இன்ஸ்பெக்டர் பென்சில் மூலமாக நகத்திலிருந்த அழுக்கை அகற்றிக் கொண்டிருந்தார். அப்போது அது அவரது கையைக் குத்தி விட்டது. அதனால் விரல் வீங்கி விட்டது. டாக்டர் கடைசியில் கையைத் துண்டிப்பதற்கு ஆலோசனை வழங்கினார். அவர் அதனை சாதாரண விஷயமாக நினைத்தார். அதன் விளைவாக அவர் மரணித்து விட்டார்.

அதேபோன்று ஒருநாள் நான் பென்சில் சீவிக் கொண்டிருந்தேன். அப்போது எனக்கு காயம் ஏற்பட்டது. மறுநாள் நான் உலாவச் செல்லும் போது எனக்கு டெபுடி

இன்ஸ்பெக்டரின் சம்பவம் நினைவுக்கு வந்தது. எனது கையும் வீங்கி இருந்தது. அப்போதே நான் துஆ செய்தேன். எனக்கு இல்ஹாம் இறங்கியது. பின்னர் கையைப் பார்த்த போது முற்றிலும் சரியாகி விட்டது. எந்த வீக்கமும், வலியும் எஞ்சியிருக்கவில்லை.

சுருக்கமாக, விஷயம் என்னவென்றால் இறைவன் அருள் செய்து விட்டால் பின்னர் எந்தத் துன்பமும் எஞ்சியிருப்பதில்லை. அதற்குரிய முக்கிய நிபந்தனை என்னவென்றால், மனிதன் தன்னிடம் தூய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். பின்னர் எவரைப் பற்றி இறைவன் இவர் பயனளிக்கும் மனிதர் எனக் கருதுவானோ அவரது வாழ்நாளில் முன்னேற்றத்தை வழங்குகிறான். அவரால் உலகிற்கும் அவருக்கும் நன்மை சேர்கிறது என்றால் அவனுடைய வாழ்க்கையில் முன்னேற்றத்தை வழுங்குகின்றான்.'' அதில் சில விதிவிலக்கும் உள்ளது. ஆனால் பெரும்பாலும் அதுவே இறைவனின் நடைமுறையாக உள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ''இதுபற்றி நமது வேதத்தில் தெளிவாக கூறப்பட்டுள்ளது. (13:18) وَاَمَّا مَا يَنْفَعُ النَّاسَ فَيَمْكُثُ فِى الْاَرْضِ இதுபோன்றே முந்தைய வேதங்களிலும் காணப்படுகின்றது. மனிதன் மிகப்பெரிய பணிகளுக்காக படைக்கப்பட்டுள்ளான். ஆனால், நேரம் வருகின்ற போது, அந்தப் பணியை ஒரு மனிதன் முழுமையாக செய்யாத போது இறைவன் அவனை முடித்து விடுகிறான். தொழிலாளிகளைப் பாருங்கள். அவர் சரியாக வேலை செய்யா விட்டால் அவரது முதலாளி அவரை நீக்கி விடுகிறான். அவ்வாறிருக்க, தனது கடமையை செலுத்தாத மனிதனை இறைவன் ஏன் விட்டு வைக்க வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எமது மிர்ஸா சாஹிப் (அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தந்தையார்) 50 வருடங்களாக சிகிச்சை செய்து வந்தார்கள். ஆனால் எனக்கு உறுதியான மருந்து கிடைக்கவில்லை என்று அன்னார் கூறினார்கள். உண்மை என்னவென்றால், இறை கட்டளையின்றி மனிதனுள் செல்லும் ஒரு துகள் கூட அவனுக்கு பயனளிக்க முடியாது. இறைவன் அருள் செய்வதற்கு அதிகமாக தவ்பா மற்றும் இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும். இறை அருள் வரும் போது துஆவும் ஏற்றுக் கொள்ளப்பட்டு விடுகிறது.

இறைவனும் இதைத்தான் கூறுகின்றான்: நான் உங்களது துஆக்களை ஒப்புக் கொள்வேன். ஆனால் சில நேரத்தில் எனது நியதியையும் தீர்ப்பையும் நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இறைவன் கூறுகின்றான். எனவே, நான் இறை கட்டளை வராத வரை துஆ ஒப்புக் கொள்ளப்படுவதை குறைவாகவே நம்புகிறேன். அடியான் மிகவும் திறனற்றவன். ஒன்றும் செய்ய இயலாதவன். எனவே இறை அருளின் மீதே பார்வையை வைக்க வேண்டும்.'' (மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 317-319; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) அடுத்து அன்னார் அல்லாஹ்விற்குரிய உரிமை மற்றும் அடியாருக்குரிய உரிமையை வழங்குவது தொடர்பாக உண்மையான இஸ்லாமிய போதனைகளின் ஒளியில் வழிகாட்டியுள்ளார்கள். மேலும் தனது முன்மாதிரியையும் நிலைநாட்டினார்கள். அதனை அன்னார் தமது எஜமானர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடமிருந்து கண்டு அன்னாரிடம் கற்றுக் கொண்டுள்ளார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''அல்லாஹ்விற்குரிய உரிமைகளில் மிகப் பெரும் உரிமை அவனை வணங்குவதாகும். மேலும், இந்த இறை வணக்கம் தனிப்பட்ட நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கக் கூடாது. மாறாக, நரகம், சொர்க்கம் இல்லையென்றால் அப்போதும் கூட அவனை வணங்க வேண்டும். படைப்பினத்திற்கு தன்னை படைத்தவனிடம் இருக்க வேண்டிய தனிப்பட்ட தொடர்புகளில் எந்த வேறுபாடும் வந்து விடக் கூடாது. இன்றைய நாட்களில் நாத்திகவாதிகள் இந்த ஆட்சேபனையை செய்கின்றனர். நீங்கள் பேராசையின் காரணமாகவே தொழுகிறீர்கள் என்கின்றனர்.''

அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்: ''அல்லாஹ்வின் மீது கொண்ட அன்பு, நேசத்தால் இறை வணக்கம் செய்யப்படுதல் வேண்டும். எனவே, உரிமைகளை நிறைவேற்றுவதில் நரகம், சொர்க்கம் என்ற கேள்விக்கே இடமில்லை.'' அல்லாஹ்விற்குரிய உரிமைகளைச் செலுத்த வேண்டும் என்றால் சொர்க்கம் கிடைக்கும். நரகம் கிடைக்கும் என்ற பேச்சுக்கே இடமில்லை. அல்லாஹ்வின் மீது கொண்ட அன்பின் தேட்டத்தால் மட்டும் அவனை வணங்க வேண்டும். அல்லாஹ் செய்த அருளுக்குப் பதிலாக அவனை வணங்குவது அவசியமாகும்.

இரண்டாவது விஷயம், மனித இனத்தின் மீதான அனுதாபம் ஆகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''எதுவரை எதிரிக்காக துஆ செய்யப்படுவதில்லையோ அதுவரை உள்ளம் முழுமையாக தூய்மை அடையாது என்பது எனது கருத்தாகும். உத்வூனீ அஸ்தஜிப்லகும் என்னிடம் பிரார்த்தனை செய்யுங்கள். நான் பதிலளிப்பேன் என்று இறைவன் கூறியதில் எதிரிகளுக்காக துஆ செய்தால் அதனை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்ற எந்த நிபந்தனையும் விதிக்கப்படவில்லை. என்னைப் பொருத்த வரையில் எதிரிகளுக்காக துஆ செய்வது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சுன்னத் ஆகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் துஆவின் மூலமே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முஸ்லிமானார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பெரும்பாலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்காக துஆ செய்து வந்தார்கள். எனவே, கருமித்தனம் காட்டி, தனிப்பட்ட பகைமையை வெளிப்படுத்தக் கூடாது. உண்மையில் எவருக்கும் துன்பமிழைக்கக் கூடாது. நான் இரண்டு மூன்று முறை துஆ செய்யாத எந்தவொரு எதிரியும் எனக்கு தென்படவில்லை. இறைவனுக்கு அதற்காக நான் நன்றி கூறுகிறேன். இதே விஷயத்தை நான் உங்களுக்கும் போதிக்கின்றேன். மேலும் ஒருவருக்கு துன்பம் இழைக்கும் நபரிடமும் அநியாயமாக கருமித்தனம் காட்டி ஒருவருடன் பகைமை பாராட்டுகின்ற நபரிடமும் இறைவன் எந்தத் தொடர்பும் கொள்ள மாட்டான். அதே போன்று அவனுக்கு ஒன்றை இணையாக்கும் நபரிடமும் அவன் தொடர்பு வைக்க மாட்டான்.'' அதாவது, ஆகாத பகைமை மற்றும் அந்தப் பகைமையின் காரணமாக ஒருவருக்கு துன்பமிழைப்பது அல்லாஹ்வுக்கு மிகவும் வெறுக்கத்தக்கதாகும். எவ்வாறு அவனுக்கு இணை வைப்பதை அவன் வெறுகின்றானோ அதபோன்று அவன் இந்தச் செயலையும் வெறுக்கின்றான்.

''அல்லாஹ் ஓரிடத்தில் பிரிப்பதை விரும்புவதில்லை. மற்றோரிடத்தில் சேர்ப்பதை விரும்புவதில்லை. (அதாவது, இணை வைக்கின்ற அந்த நிலையை விரும்புவதில்லை.) மனித இனம் ஒருவருக்கொருவர் ஒன்றுபட்டு இருக்க வேண்டும் என்று நாடுகிறான். அதே நேரத்தில் தனக்கு இணையாக எவரையும் சேர்க்காமல் இருக்க வேண்டும் என விரும்புகிறான். மனித இனம் தங்களுக்கிடையில் சண்டையிடுவதையும், குழப்பம் ஏற்படுவதையும் ஒருவரின் முகம் ஒரு பக்கமும், மற்றவரின் முகம் எதிர் பக்கமும் இருப்பதை அவன் விரும்புவதில்லை. அல்லாஹ்வுக்கு எதனையும் இணையாக்குவதையும் தனக்காக அவன் விரும்புவதில்லை. மனித இனத்திடம் பிளவை விரும்புவதில்லை. மனித இனம் ஒன்று பட்டு அன்பு, நேசத்துடன் இருக்க வேண்டும் என அவன் நாடுகிறான். மேலும் அவர்கள் அனைவரும் சமமானவர்களாக ஒருவர் மற்றவரை பாவிக்க வேண்டும் என அவன் நாடுகிறான். ஆனால் அவன் ஏகனாகவும், தனித்தவனாகவும் இருப்பதையே தமக்காக விரும்புகிறான்.

நிராகரிப்பாளர்களுக்காகவும் கூட துஆ செய்தல் வேண்டும். அதன் மூலம் நெஞ்சம் திறந்து விடுகின்றது. தைரியம் வளர்கின்றது. எனவே, எதுவரை நமது ஜமாஅத் இந்த நிலையை தங்களிடம் ஏற்படுத்திக் கொள்ளவதில்லையோ அதுவரை அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் எந்த வித்தியாசமும் இருக்காது. எவர் மார்க்கத்தின் மூலமாக ஒருவருடன் நட்பு கொள்கின்றாரோ அவர் கீழான நிலையில் இருக்கும் அவரது அன்பர்களுடன் கனிவாகவும், மென்மையாகவும் நடக்க வேண்டும். அவருடன் அன்பு கொள்ள வேண்டும். இது மிகவும் முக்கியமான விஷயமாகும். ஏனென்றால், இது இறைவனின் மகிமையாகும். அதாவது தீயவர்களைக் கூட அவர்கள் நல்லவர்களுடன் இணைந்திருக்கும் போது அவன் மன்னித்து விடுகிறான். எனவே, என்னுடன் தொடர்பு கொண்டுள்ள நீங்கள் இந்தக் கூற்றிற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்.

فَاِنَّهُمْ قَوْمٌ لَا يَشْقٰى جَلِيْسُهُمْ அதாவது, அந்த சமுதாயம் எப்படிப்பட்டதென்றால், அவர்களுக்கு அருகில் இருப்பவர்கள் துர்பாக்கியசாலியாக இருப்பதில்லை.

تَخَلَّقُوْا بِاَخْلَاقِ اللّٰهِ அல்லாஹ்வின் பண்புகளை மேற்கொள்ளுங்கள் என்ற போதனையின் சாராம்சமே மேற்கண்ட விஷயமாகும்.'' (மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 96-97; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே, இவை நான் உங்கள் முன் எடுத்துரைத்த ஒரு சில விஷயங்களாகும். மாபெரும் கருவூலத்திலிருந்து உண்மையான இஸ்லாமிய போதனைகளுக்கு ஏற்பவும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரிக்கேற்பவும் இவ்விஷயங்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு எடுத்துரைத்துள்ளார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மற்றும் திருக்குர்ஆனின் போதனைகளை தம் மீது செயல்படுவதற்குரிய உரிமையை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தான் செலுத்தியுள்ளார்கள் என்பது நமக்கு இதிலிருந்து தெளிவாகின்றது. அன்னார் கத்மே நுபுவ்வத்திற்கான வெறும் வாதம் மட்டும் செய்யவில்லை. மாறாக, அன்னாரது ஒவ்வொரு சொல்லும், செயலும் எஜமானர் (ஸல்) அவர்களைப் பின்தொடர்ந்ததாகவே இருந்தது. இந்த போதனைகளையும் இந்த ஷரீஅத்தையும் நிலைநாட்டவே அன்னார் துடித்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு இறங்கிய இந்த வேதம் தான் இரட்சிப்பிற்குரிய வழியைக் காட்டியுள்ளது என்பதை உலகம் அறிந்து கொள்ள வேண்டும் என அன்னார் விரும்பினார்கள். தம்மை ஏற்றுக் கொண்டவர்கள் இதன்படி செயல்பட வேண்டும் என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைத்ததற்கான உரிமையை வழங்கும் நற்பேற்றை நமக்கு வழங்குவானாக! திருக்குர்ஆன் மற்றும் சுன்னத்திற்கேற்ப செயல் முன்மாதிரியை வெளிப்படுத்தும் நற்பேற்றை நமக்கு தந்தருள்கின்ற அதே வேளையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உயர் தகுதியின் சரியான ஞானத்தையும் நமக்கு தந்தருள்வானாக! மேலும், இஸ்லாத்தின் உண்மையான வடிவத்தை உலக மக்களுக்கு நாம் காட்டக் கூடியவர்களாக திகழ்வோமாக!

## அருளுக்குரிய ரமலானுடன் தஹ்ரீகே ஜதீதிற்கு இருக்கும் ஆழமான தொடர்பு

தஹ்ரீகே ஜதீதின் தோற்றுனர் ஸய்யிதுனா ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அருளுக்குரிய ரமலானுடன் தஹ்ரீகே ஜதீதிற்கு இருக்கும் ஆழமான தொடர்பு பற்றி இவ்வாறு கூறினார்கள்:

“நீங்கள் ரமலானிலிருந்து பயன் பெற விரும்பினால் தஹ்ரீகே ஜதீதிற்கேற்ப செயல்படுங்கள். தஹ்ரீகே ஜதீதிலிருந்து பயன் பெற விரும்பினால் நோன்புகளிலிருந்து சரியான பயனைப் பெற வேண்டும். தஹ்ரீகே ஜதீது என்பது எளிமையான வாழ்க்கையை வாழ்வதும் உழைப்புடனும் கஷ்டங்களைச் சகிப்பதும் தியாகம் செய்வதற்கு தன்னைத்தானே பழக்கப்படுத்திக் கொள்வதும் ஆகும். இந்தப் பாடத்தை உங்களுக்கு கற்றுக் கொடுப்பதற்காகவே ரமலான் வந்திருக்கின்றது. எனவே, எந்த நோக்கத்திற்காக ரமலான் வந்துள்ளதோ, அந்த நோக்கத்தைப் பெறுவதற்காக முயற்சி செய்யுங்கள்..... ஒவ்வொரு நபரும் அவரது ரமலான் தஹ்ரீகே ஜதிதுடையதாகவும் அவரது தஹ்ரீகே ஜதீது ரமலானுடையதாகவும் இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். ரமலான் நமது நஃப்ஸை அழிக்கக் கூடியதாகவும் தஹ்ரீகே ஜதீது நமது ஆன்மாவிற்கு புத்துணர்வூட்டக் கூடியதாகவும் இருக்க வேண்டும். எனவே, நான் ரமலானிலிருந்து பயனடையுங்கள் என்று கூறும்போது நீங்கள் தஹ்ரீகே ஜதீதின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் ரமலானின் ஒளியில் புரிந்து கொள்ளுங்கள் என்பதையே உண்மையில் நான் உங்களுக்குப் புரிய வைத்துள்ளேன். தஹ்ரீகே ஜதீதின் பக்கம் கவனம் செலுத்துங்கள் என்று நான் கூறும்போது வேறு சொற்களில் நான் உங்களுக்கு நீங்கள் எல்லா நிலையிலும் ரமலானின் நிலைமையை உங்களிடம் ஏற்படுத்துங்கள் என்றே கூறுகின்றேன். சரியான தியாகத்தை தொடர்ந்து செய்கின்ற பழக்கத்தை உங்களிடம் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். எந்த ரமலான் உண்மையான தியாகம் இல்லாமல் கடந்து சென்று விடுகின்றதோ அது ரமலான் அல்ல. மேலும் எந்த தஹ்ரீகே ஜதீது ஆன்மாவிற்கு புத்துணர்ச்சியூட்டாமல் கடந்து சென்று விடுகின்றதோ அது தஹ்ரீகே ஜதீது அல்ல.”

(ஜுமுஆ குத்பா 4 நவம்பர் 1938)

இது தொடர்பாக 11 நவம்பர் 1938 அன்று நிகழ்த்திய குத்பா பேருரையின் இறுதியில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஜமாஅத்திடம் தஹ்ரீகே ஜதீதிற்காக சந்தா செலுத்துபவருக்கு குறிப்பாக துஆ செய்யுமாறு வேண்டியவாறு இவ்வாறு கூறினார்கள்:

“ரமலானின் இறுதிப் பத்து நாட்கள் வரவிருக்கின்றது. இந்த நாட்களை தஹ்ரீகே ஜதீது தொடர்பாக செய்யப்பட்டுள்ள கடந்த கால தியாகங்களுக்காக நன்றி செலுத்துவதற்கும் இனி வருங்காலத்தில் ஆற்றலைப் பெறுவதற்காகவும் செலவிடுங்கள். எவர்களுக்கு கடந்த வருடங்களில் தியாகம் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்திருக்கின்றதோ அவர் இதற்காக அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துங்கள். துஆ செய்கின்ற ஒவ்வொருவரும் அல்லாஹ்விடம் தியாகம் செய்கின்ற ஒவ்வொருவருக்காகவும் துஆ செய்ய வேண்டும். அதாவது, மார்க்கத்தின் எழுச்சிக்காகவும் இயக்கத்தின் வலிமைக்காகவும் செய்த தியாகத்தின் விளைவாக அல்லாஹ் அவர் மீது தனது அருளையும் கருணையையும் இறக்க வேண்டும். எத்தகைய கலப்பற்ற மனத்தூய்மையுடனும் அன்புடனும் அவர் இறைவனின் வழியில் தியாகம் செய்தாரோ அதற்கேற்ப அவர் மீது தனது அன்பையும் அருள்களையும் இறக்குவாயாக! ஆமீன் என்று துஆ செய்ய வேண்டும்.”

(அல் ஃபஸ்ல் 15 நவம்பர் 1938, பக்கம் 4)

அல் ஃபஸ்ல் தினப்பத்திரிகையில் 29 நவம்பர் 1938 -ல் வெளியிடப்பட்ட அறிவிற்கேற்ப ஜமாஅத்திலுள்ள தூய உள்ளம் கொண்டவர்கள் ஆரம்பத்திலிருந்தே இதனை வழக்கமாகக் கொண்டிருந்தனர். அதாவது அவர்கள் எப்போதும் ரமலானின் முதல் பதினைந்து நாட்களுக்குள் தஹ்ரீகே ஜதீது சந்தாவிற்காக அவர்கள் செய்திருந்த வாக்குறுதிகளை நூறு சதவிகிதம் முழுமையாகச் செலுத்தியவாறு அல்லாஹ்வின் அருள்களையும் பரக்கத்துகளையும் ஈர்ப்பதற்கு முயற்சி செய்கின்றனர். எனவே, இப்போது நாம் அல்லாஹ் வழங்கியுள்ள நல்வாய்ப்பிற்கேற்ப மீண்டும் ஒருமுறை எண்ணற்ற வானத்தின் கருணைகளையும் பரக்கத்துகளையும் தன்னகத்தே கொண்டுள்ள இந்தப் புனித மாதத்தில் அடி எடுத்து வைக்க இருக்கின்றோம். தஹ்ரீகே ஜதீதிற்கு ஒத்துழைப்பு நல்குகின்ற அனைவரிடமும் அவர்கள் தங்களது மகத்தான ஜமாஅத்தின் மரபுகளை நிலைத்து நிற்கும்படி செய்தவாறு அருளுக்குரிய ரமலானின் 20 வது நாள் அதாவது ஜூன் 27 -ஆம் தேதிக்கு முன்னதாக தாங்கள் செலுத்த வேண்டிய தொகையை முழுமையாகச் செலுத்தி ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் ஏற்றுக் கொள்ளப்படும் துஆக்களிலிருந்து முழுமையான பங்கைப் பெறும் நற்பாக்கியத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

அனைத்து மாவட்ட மற்றும் உள்ளூர் அமீர்கள், தஹ்ரீகே ஜதீது செயலர்கள், பொறுப்புப் பிரச்சாரகர்கள் ஆகியோரிடம் நாம் கேட்டு கொள்வது என்னவென்றால், தயவுசெய்து தத்தமது ஜமாஅத்துகளில் உள்ள சகோதர சகோதரிகளில் தமது தஹ்ரீகே ஜதீத் சந்தாவை நூறு சதவிகிதம் முழுமையாக செலுத்தியவர் -களின் பட்டியலை ஜுன் 27 ஆம் தேதிக்கு முன்னதாக தபால் மூலமும் மற்றும் ஜுலை 3 ஆம் தேதிக்கு முன்னதாக Fax மூலமாகவோ அல்லது Email மூலமாகவோ வகாலத்தே மால் தஹ்ரீகே ஜதீது காதியான் அவர்களுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம். இதனால் எல்லா ஜமாஅத்துகளின் ஒட்டுமொத்த பட்டியலை 29 ரமலானில் நடக்கும் கூட்டுத் துஆவிற்காக ஸய்யிதுனா ஹுஸூர் அய்யத்தஹுல்லாஹுத் -தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுக்கு அனுப்புவதற்கு வசதியாக இருக்கும். ஜஸாக்குமுல்லாஹுத்தஆலா கைரா.

(வகீலுல் மால் தஹ்ரீகே ஜதீத், காதியான்)

## ரமலானின் அருள்களில் வக்ஃபே ஜதீதும் வக்ஃபே ஜதீதின் அருள்களில் ரமலானின் அருள்களும் உள்ளன

ஒருமுறை மீண்டும் நாம் எண்ணற்ற வானத்தின் கருணைகள் மற்றும் அருள்களைத் தன்னகத்தே கொண்டுள்ள அருளுக்குரிய ரமலானின் புனித மாதத்தில் நாம் நுழைவது நமது நற்பாக்கியமாகும். அல்ஹம்துலில்லாஹ்.

ஸய்யிதுனா ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் ரஹிமஹுல்லாஹுத்தஆலா அவர்கள் 1998 -ல் வக்ஃபே ஜதீதின் புதிய வருடத்தைப் பற்றிய அறிவிப்பைச் செய்தவாறு இவ்வாறு கூறினார்கள்:

“ இது ரமலான் மாதமாகும். உண்மையில் வக்ஃபே ஜதீதிற்காக நான் கூற ஆரம்பித்த இந்தக் கருத்தை இப்போது நான் ரமலானுடன் இணைக்க விரும்புகின்றேன். அதன் மூலமாக ரமலானின் அருள்களில் வக்ஃபே ஜதீதும் வக்ஃபே ஜதீதின் அருள்களில் ரமலானின் அருள்களும் சேர்ந்து விடும்.”

மேலும் அவர்கள் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்பவர் -களுக்கு நற்செய்தி வழங்கியவாறு இவ்வாறு கூறினார்கள்:

“ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள். ஒவ்வொரு விடியற்காலையிலும் இரண்டு மலக்குகள் இறங்குகின்றனர். அவர்களில் ஒருவர் அல்லாஹ்வே!

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 99448-03650
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Vol. 1 Thursday 2 JUNE 2016 Issue No. 13

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
Tel. : +91 1872-224757
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

*செலவு செய்கின்ற வள்ளலுக்கு மேலும் வழங்குவாயாக! மேலும் அவரது அடிச்சுவட்டில் செல்கின்ற பலரையும் உருவாக்குவாயாக என்று கூறுகின்றார். மற்றவர், அல்லாஹ்வே! தடுத்து வைத்துக் கொள்கின்ற கருமியை அழித்து விடுவாயாக! அவரது பொருளையும் செல்வத்தையும் அழித்து விடுவாயாக! என்று கூறுகின்றார். இதில் முதல் பகுதி மிகத் தெளிவாக இருக்கின்றது. அல்லாஹ்வின் வழியில் செலவு செய்பவர்களுக்காக குறிப்பாக அருளுக்குரிய ரமலானில் மலக்குகள் துஆக்கள் செய்கின்றனர். மேலும், அவர்களது அடிச்சுவட்டில் செல்கின்றவர்களுக்காகவும் துஆக்கள் செய்கின்றனர். எனவே, நீங்கள் உங்களது நன்மைகளில் உங்கள் குழந்தைகளையும் பங்கு பெற வையுங்கள். உங்களுக்கு அருகில் இருப்பவர்களையும் உங்களது சுற்றுச் சூழலில் இருப்பவர்களையும் இந்த நன்மைகளில் பங்கு பெற வையுங்கள். அதன் மூலமாக நன்மைகள் பற்றிய இந்தக் கருத்து பூக்களாக மலர்ந்து முழு உலகையும் சூழ்ந்து கொள்ள வேண்டும். இது எத்தகைய செயலாக இருக்கின்றது என்றால், அது அல்லாஹ்வின் தரப்பிலிருந்து வீசும்படி செய்யப்படுகின்ற காற்றுகளின் திசையில் இருக்கும். மலக்குகள் துஆக்கள் செய்வர். நீங்கள் முன்னேறிச் செல்வீர்கள். மிகவும் வேகமாக இறைவன் தனது அருள்களால் இறைவனின் வழியில் செலவு செய்பவர்களின் பொருளில் பரக்கத்தை வழங்குவான். இந்த அருளின் முன்மாதிரிகளை நாம் பார்த்துக் கொண்டிருக்-கின்றோம். முழு உலகிலும் இவ்வாறு செலவு செய்பவர்களுக்கு அல்லாஹ் மேலும் வழங்கிக் கொண்டிருக்கின்றான். அவர்களைப் போன்றவர்களை மேலும் உருவாக்குகின்றான். இதன் விளைவாக அஹ்மதிய்யத்திற்கு அதிகமாக ஏற்படும் சுமைகளை எளிதாக சுமக்க முடிகின்றது.''*

*(2 ஜனவரி 1998 –ல் இலண்டனிலுள்ள ஃபஸ்ல் பள்ளிவாயிலில் நிகழ்த்திய ஜுமுஆ பேருரையிலிருந்து)*

*கடந்த வருடங்களைப் போன்றே இவ்வருடமும் அருளுக்குரிய ரமலானின் இறுதியில் வக்ஃபே ஜதீது சந்தாவை முழுமையாக செலுத்துகின்ற நபர்களின் பெயர்கள் துஆவிற்காக ஸய்யிதுனா ஹுஸூர் அய்யத்தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். வக்ஃபே ஜதீத் திட்டத்தில் பங்கு பெற்றுள்ள அனைவரும் இந்த அருளுக்குரிய மாதத்தில் ஸய்யிதுனா ஹுஸூர் அய்யத்தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் ஏற்றுக் கொள்ளப்படும் துஆக்களிலிருந்து முழுமையான பங்கைப் பெறுகின்ற நற்பாக்கியத்தை பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன். எல்லா ஜமாஅத் பொறுப்பாளர்களும் கண்ணியத்திற்குரிய முபல்லிக்குகளும் முஅல்லிம்களும் இந்த அருளுக்குரிய மாதத்தில் வக்ஃபே ஜதீது சந்தாவை முழுமையாக செலுத்தும் ஜமாஅத்திலுள்ள நபர்களின் பட்டியலை அதற்கென்று அனுப்பட்டுள்ள படிவத்தில் எழுதி தயார் செய்து ரமலான் மாதத்தின் 25 –ஆம் தேதிக்குள் இந்த அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். அல்லாஹ் நம் அனைவருக்கும் தத்தமது வாக்குறுதிகளைக் கவனமாக ஆய்வு செய்து பார்த்து முடிந்தவரை தமது பொறுப்புகளை அதற்குரிய உரிமையைச் செலுத்தியவாறு நிறைவேற்றி ஹுஸூர் அவர்களின் எதிர்பார்ப்புகளை விடவும் அதிகமாக வக்ஃபே ஜதீதிற்கான இலக்கை விரைவில் பூர்த்தி செய்யக்கூடிய நல்வாய்ப்பை வழங்குவானாக! ஆமீன்.*

*(நாஸிம் வக்ஃபே ஜதீத் - இந்தியா)*

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

பார்வையில் அசல் விஷயம் இதுவாகும். அதாவது, மனிதன் உண்மையுடனும் முழுமையான கலப்பற்ற மனத்தூய்மையுடனும் இந்த மாதத்தின் (அருளிலிருந்து) என்னை விலக்கி வைக்காதே என்று இறைவனிடம் வேண்டும்போது அப்படிப்பட்டவரை இறைவன் அந்த அருளிலிருந்து விலக்கி வைக்க மாட்டான். அத்தகைய நிலைமையில் மனிதன் ரமலான் மாதத்தில் நோய்வாய்ப்பட்டால் இந்த நோய் அவனுக்கு கருணையாக ஆகி விடும். ஏனென்றால், ஒவ்வொரு செயலும் எண்ணங்களின் அடிப்படையிலேயே அமைகின்றது. நம்பிக்கை கொண்டவர் தனது இருப்பின் மூலம் தன்னைத்தானே இறைவனின் வழியில் தைரியமிக்கவராக நிரூபிக்க வேண்டும். ஒருவர் நோன்பு வைப்பதிலிருந்து விலகி இருந்து அவரது உள்ளத்தில் வேதனையுடன் அந்தோ நான் ஆரோக்கியத்துடன் இருந்து நோன்பு வைத்திருக்க வேண்டுமே என்ற எண்ணம் இருந்தால், அவரது உள்ளம் இந்த விஷயத்திற்காக கண்ணீர் வடித்தால், மலக்குகள் அவருக்காக நோன்பு நோற்பார். அவர் சாக்குப்போக்குகளைத் தேடுபவராக இருக்கக் கூடாது என்பது நிபந்தனையாகும். பிறகு அப்படிப்பட்டவரை இறைவன் ஒருபோதும் நற்கூலியிலிருந்து விலக்கி வைக்க மாட்டான்.

இது ஒரு நுட்பமான விஷயமாகும். அதாவது ஏதாவது ஒரு நபர் மீது (அவரிடமுள்ள சோம்பலின் காரணமாக) நோன்பு சுமையாக இருந்தால், அவர் தனது எண்ணத்தில் நான் நோயாளியாக இருக்கின்றேன். எனது ஆரோக்கியம் எப்படி இருக்கின்றதென்றால் ஒருவேளை நான் சாப்பிடவில்லையென்றால் இந்த இந்த நோய்கள் எனக்கு வந்து விடும். இது நடந்து விடும்; அது நடந்து விடும் என்று நினைக்கின்றார் என்றால் பிறகு அத்தகைய நபர் இறைவனது அருளை சுயமே தன் மீது ஒரு சுமையாக எண்ணுகின்ற போது எப்போது அவர் நற்கூலியைப் பெறுவதற்குத் தகுதியுடையவராக ஆக முடியும்? எனினும் எந்த நபரது உள்ளம் ரமலான் வந்து விட்டது. நான் அது வர வேண்டும். நான் நோன்பு நோற்க வேண்டும் என்பதற்காகவே காத்துக் கொண்டிருந்தேன் என்று மகிழ்ச்சி அடைகின்றதோ அவர் நோயின் காரணமாக நோன்பு வைக்க முடியாமல் போனாலும் அவர் வானத்தில் நோன்பிலிருந்து விலக்கி வைக்கப்படவில்லை. இவ்வுலகில் பலரும் சாக்குப் போக்குகளைத் தேடுபவர்களாக இருக்கின்றனர். நாம் எவ்வாறு உலகிலுள்ளவர்களை ஏமாற்றி விடுகின்றாமோ அவ்வாறே இறைவனையும் ஏமாற்றி விடலாம் என்று அவர்கள் எண்ணுகின்றனர். சாக்குப் போக்குகளைத் தேடுபவர்கள் தாங்களாகவே பல விஷயங்களை உருவாக்குகின்றனர். அதில் செயற்கையானவற்றை சேர்த்து அவ்விஷயங்கள் சரியானவையாகும் என்கின்றனர். ஆனால், இறைவனது பார்வையில் அவை சரியானவை அல்ல. செயற்கையானவற்றின் கதவு மிகவும் விரிவானதாகும். மனிதன் விரும்பினால் (செயற்கையான) அவற்றின் அடிப்படையில் முழு வாழ்நாளும் உட்கார்ந்தே தொழுது கொண்டிருக்கலாம். ரமலானின் நோன்புகளை முற்றிலுமாக வைக்காமல் இருக்கலாம். ஆனால், உண்மையையும் கலப்பற்ற மனத்தூய்மையையும் தன்னகத்தே கொண்டிருப்பவரின் எண்ணமும் நாட்டமும் இறைவனுக்கு தெரியும். அவரது உள்ளத்தில் வேதனை இருக்கின்றது என்பதும் இறைவனுக்கு தெரியும். இறைவன் அவருக்கு நற்கூலியை விட அதிகமாக வழங்குகின்றான். ஏனென்றால், உள்ளத்தின் வேதனையானது மதிப்பளிப்பதற்குத் தகுதியுள்ள ஒரு விஷயமாகும். சாக்குப்போக்குகளை தேடும் மனிதன் விளக்கங்கள் கூறுவதையே சார்ந்து நிற்கின்றான். ஆனால், இறைவனது பார்வையில் அவன் சார்ந்து நிற்பவைக்கு எந்த மதிப்பும் இல்லை. நான் ஆறு மாதங்கள் நோன்பு நோற்ற போது ஒருமுறை நபிமார்களின் ஒரு கூட்டம் (கஷ்.ஃப் காட்சியில்) என்னைச் சந்தித்தனர். நீர் உம்மை இந்த அளவு ஏன் கஷ்டத்தில் போட்டுக் கொள்கின்றீர்? இதிலிருந்து வெளியில் வருவீராக! என்று அவர்கள் கூறினர். இவ்வாறே எப்போது மனிதன் தன்னைத்தானே இறைவனுக்காக கஷ்டத்தில் போட்டுக் கொள்கின்றானோ அப்போது அந்த இறைவன் தானே முன் வந்து தாய் தந்தையர் போன்று அவன் மீது கருணை காட்டியவாறு நீர் ஏன் கஷ்டத்தில் வீழ்ந்து கிடக்கின்றீர்? என்று அவரிடம் கூறுகின்றான்.

(மல்.ஃபூஸாத் தொகுதி 2, பக்கம் 561-564; 2003 ஆம் ஆண்டு பதிப்பு - காதியான்)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar, at Fazle-Umar Printing Press Qadian, Harchowal Road, Qadian
Distt: Gurdaspur-143516, Punjab, India. And published at office of the Weekly Badar Moh-Ahmadiyya, Harchowal Road P.o:Qadian Distt:Gsp-143516, Punjab.India.Editor: Muzzammil Ahmad